1978 செப்டம்பர் 9]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தை விரிவு படுத்துகிற திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள், அந்தந்தப் பேரூராட்சிப் பகுதியிலே உள்ளவர்கள் அதிக வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் ; அந்த வரியை அவர்களாலே தாங்க முடியாது என்ற அடிப்படையிலே தான் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? ஆமெனில், உரிய விதத்திலே அவர்களுக்குப் பரிகாரம் காணப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விதிக்கின்ற அந்த வரிக்கு ஈடாக வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

திரு. க. அன்பழகன் : வளர்ச்சிப் பணிகள் என்பது 10 ஆண்டுக்காலம், 20 ஆண்டுக் காலம் ஆகியும் புறநகர்ப் பகுதியிலே நடைபெறாமல் இருந்திருக்கிறது. ஏற்கனவே அப்படித்தான், இனியும் அப்படித்தான் ஏற்பட முடியும். எனவே, ஏற்படுகிற தாமதத்தையொட்டி, முன்னாலேயே வரி வசூலிக்காமல் இருக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த மக்களுடைய முறையீட்டை உரிய வகையிலே பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வடலூர், சேஷசாயி தொழிற்சாலைத் தொழிலாளர்கள்.

*வினா எண். 114—திரு. சி. ராமநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வடலூர், சேஷசாயி தொழிற்சாலையில் சென்னை டி.சி.எல். அவர்கள் முன்னிலையில் 10–3–1978 அன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ற பெயரால் சிறுபான்மை தொழிற்சங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் சிறுபான்மை தொழிற் சங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1978 செப்டம்பர் 9

(முற்பகல் 9-50.)

திரு. சி. ராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, வடலூர் சேஷசாயி என்ற தொழிற்சாலையில் சிறுபான்மைத் தொழிற் சங்கம் ஒப்பந்தம் செய்துகொண்டு பெரும்பான்மை யாக உள்ள தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுவது அங்கே நடைபெறுகிறது என்று கூறுகிறார்கள். அது உண்மையா ? அப்படி உண்மை என்றால், அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக் குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கூறப்படுவது உண்மை அல்ல.

திரு. சி. கோவிந்தராசன் : அந்த ஒப்பந்தம் செய்ததால் வேலை பளு இருக்கிறது என்றும் அந்த ஒப்பந்தத்தை செய்யக் கூடாது என்று தொழிலாளர்கள் மத்தியில் எதிர்ப்பு இருந்தும் கூட அந்த ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு ஒரு வாரம் தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெற்றது அமைச்சர் அவர் களுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் மைனாரிட்டி ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதை அறிந்து அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலை நிறுத்தம் நடந்தது தெரியும். ஆனால் ஒப்பந் தம் ஏற்படுவதற்கு முன்பாக 3 சங்கங்களின் உறுப்பினர்களின் நிலை சரிபார்க்கப்பட்டது. அந்த 3 சங்கங்களின் பெரும்பான் மையைப் பற்றி திருப்தி செய்யப்பட்ட பிறகு தான் 10-3-78 அன்று கையெழுத்தாகியது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஜனநாயக அடிப் படையில் இது போன்ற சிறுபான்மை தொழிற் சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், ஒரு தொழி லுக்கு ஒரு சங்கம் என்ற அடிப்படையிலே பெருவாரியான தொழிலாளர்கள் இருக்கக்கூடிய சங்கங்களை அங்கீகாரம் செய் வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் வருவதை இந்த அரசு ஆதரிக்கிறது. அதற்கு வேண்டிய முறையில் எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கீகாரத்தைப் பொறுத்தவரையில் ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் என்று வந்து விட்டால் அந்தப் பிரச்சினையே எழவில்லை. ஒரு தொழிற்சாலையிலே ஒரே சங்கம் இருந்தால்

1978 செப்டம்பர் 9]

அது அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக பாவிக்கப்படும். ஒரு தொழிற் சங்கம் ஆரம்பித்து ஓராண்டுக் காலம் ஆகிவிட்டால், தங்களுக்கு அங்கீகாரம் வேண்டும் என்று நிர்வாகத்திற்கு எழுதலாம். கிடைக்கவில்லை என்றால், Evaluation and Implementation Committee அதற்கு எழுதலாம். நிவாரணம் கிடைப்பதற்கு அங்கே வசதி இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை அமுல் படுத்துவதற்கு ரகசிய வாக்கெடுப்பு முறையை அமுல் படுத்த அரசாங்கம் முன் வருமா ? ஏனென்றால் தொழிலாளர்கள் தேர்ந்தெடுத்த சங்கத்தை அங்கீகரிக்க டி. வி. எஸ். நிறுவனத்தினர் அடம் பிடிக்கிறார்கள். அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதற்கும் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இதில் எது என்பதை விளக்கிச் சொல்லி, எல்லாச் சங்கங்களும் சேர்ந்து, மத்திய சங்கமும் முடிவெடுத்து அரசுக்குப் பரிந்துரை தருமானால் அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அங்கீகரித்த சங்கத்தோடு சட்டப்படி போடப்பட்ட ஒப்பந்தத்தையும் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் மீறப்பட்டிருக்கிறது என்று புகார் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் 12 (3) செட்டில்மெண்டு ஒன்று கையெழுத்தாகியிருக்கிறது. நிர்வாகத்தின் சார்பாகவும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதில்

Subject to approval by the Central Government

என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த அரசைப் பொறுத்த வரையில் 12 (3) செட்டில்மென்ட் இருந்தால் அதற்கு மரியாதை கொடுத்து அதைச் செயல் படுத்த வேண்டும் என்று கருதுகிறது. அதன் காரணமாக, 2, 3 தினங்களாக டிபுடி லேபர் கமிஷனர் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். தேவையானால் லேபர் செக்ரட்டரி அவர்களையே டெல்லிக்கு அனுப்பி பேச்சு வார்த்தை நடத்த அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த சேஷசாயி தொழிற்சாலையில் ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னாலே வேலை நிறுத்தம் நடைபெற்றது உண்மை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே முதலிலேயே பரிசீலனை செய்து இந்தச் சங்கம்தான் சரி என்று ஒப்பந்தம் செய்ததற்குப் பின்னாலே தொழிலாளர்கள் அந்தத் தொழிற் சங்கத்திற்கு விரோதமாக திரும்பி அந்த ஒப்பந்தத்தை எதிர்க்கின்ற காலத்தில், இன்றாவது அந்த ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை எல்லோருக்கும் உண்டு. இந்த அரசு சட்டமன்றத்தில் இதைக் கூறியிருக்கிறது, வேலை நிறுத்தம்செய்வது அரசை எதிர்த்துச் செய்வது என்று கருதாது என்று. ஒருவேலைநிறுத்தம் செய்துவிட்டாலேயே 12 (3) செட்டில்மென்ட் மாறிவிடுவது இல்லை. 12 (3) செட்டில் மென்டின் தன்மை அதற்குண்டான சட்ட விளக்கம் அனைத்தையும் இதே மன்றத்தில் கேஸ்-லாவைப் படித்துக் காட்டி விளக்கியிருக்கிறேன்.

மலைத்தோட்டத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண். 115 திரு. கே. உச்சி, திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டத்தில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கடைசியாக எந்த ஆண்டில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது ?

(ஆ) ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுக்கப்படும் கூலி எவ்வளவு ?

(இ) நிர்ணயம் செய்த கூலி எல்லாத் தோட்ட அதிபர்களாலும் முறையாகக் கொடுக்கப்படுவது எப்படி கண்காணிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) நீலகிரி மாவட்டம் உட்பட தமிழ் நாட்டிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதியம் 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் 1976-ம் ஆண்டு மாற்றியமைக்கப் பெற்று அது 18—11—1976-ம் ஆண்டு கெசட்டில் வெளிவந்துள்ளது.